வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல. 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல. 285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 20.01.2025 திங்கட்கிழமை | இதழ் : 20 | பக்கங்கள் : 12

# உள்ளூராட்சி தேர்தலை தாமதித்தால் மீண்டும் நீதிமன்றத்துக்கு செல்வோம்!

## அரசை எச்சரிக்கிறது பவ்ரல் அமைப்பு

கொழும்பு, ஜனவரி 20

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்த முயன்றால் மீண்டும் நீதிமன்றம் செல்வோம் என பவ்ரல் அமைப்பு எச்சரித்துள்ளது.**

நீதிமன்றத்தில் ஆட்சேபனை முன்வைக்கப்பட் டாலன்றி, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு வேறு எந்த வாய்ப்பும் இல்லை. எனவே புதிய வேட்புமனுவைக் கோருவதற்கு 23ஆம் திகதி வரை நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிக்கப்படா விட்டால் சட்டத்தை நிறைவேற்றி ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தலை நடத்தவேண்டும். அவ்வாறில்லை என்றால் மீண்டும் நீதிமன்றத்தை நாடவேண்டியேற்படும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பவ்ரல் அமைப்பு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் நீதிமன்றத்தை நாடி தீர்ப்பையும் பெற்றுக் கொண்டுள்ளது. எவ்வாறிருப்பினும் பழைய வேட்புமனுக்கமைய தேர்தல் நடத்தப்பட்டால் அதில் சிக்கல்கள் ஏற்படும் என்பதை அனைவரும் அறிவர்.

அதற்கமைய பழைய வேட்புமனுவை இரத்து செய்து, புதிய வேட்புமனுவைக் கோரி அதற்கமைய தேர்தலை நடத்துவதற்கு அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் புதிதாக சுமார் நான்கரை இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு தமது வாக்குகளைப் பயன்படுத்த முடியும்.

அதேபோன்று உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். 11

# வாடகை செலுத்துங்கள் அல்லது வெளியேறுங்கள்

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஜனாதிபதி அநுர அறிவிப்பு

கொழும்பு, ஜன. 20

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களையும் அரசாங்கம் மீளப் பெற்றுக்கொள்ளும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

கட்டுகுருந்தவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற் றும் போதே ஜனாதிபதி இவ்வாறு 11

# விக்டர் ஐவன் காலமானார்!



கொழும்பு, ஜன. 20

மூத்த பத்திரிகையாளரும் ராவய செய்தித்தாளின் முன்னாள் ஆசிரியருமான விக்டர் ஐவன் காலமானார். அவருக்கு வயது 75.

அச்சமற்ற செய்தி அறிக்கையிடல் மற்றும் கூர்மையான விமர்சனத்துக்கு பெயர் பெற்ற ஐவன், இலங்கை 11

யாழ். நகைக்கடையில் கொள்ளை:

# இரண்டு இரணுவப் புலனாய்வளர்கள் காப்புறுதி முகாமையாளர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக் கடைக்குச் சென்று நூதனமான முறையில் பணத்தை அபகரித்த சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகள் உள்ளிட்ட அனைத்து குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளையடிக்கப்பட்ட பணமும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் வழிகாட்டலுக்கமைய யாழ்ப்பாண குற்ற விசாரணை பொலிஸ் பொறுப்பதிகாரி கெலும் பண்டார தலைமையிலான குழுவினர் 11

# விசாரணையின் பெயரில் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டவர் உயிரிழப்பு!

## பருத்தித்துறை நகர் பகுதியில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

வல்வெட்டித்துறை பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்துள்ள சம்பவம் அப் பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த நபர் நேற்று முன் தினம் சனிக்கிழமை பருத்தித்துறை நகர் பகுதியில் மதுபோதையில் நின்ற தருணம் அவருக்கு பிடியாணை உள்ளதாக கூறி வல்வெட்டித்துறை பொலிஸாரால் விசாரணையின் பெயரில் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்துள்ளதாக 11

# நாடு மீண்டும் வங்குரோத்து அடைய இனிமேல் இடமளிக்கப்போவதில்லை



## ஜனாதிபதி அநுரகுமார திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 2

இந்த நாட்டை மீண்டும் வங்குரோத்து நிலையடைவதற்கு இடமளிக்கப்போவதில்லை.

ஊழலுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் மோசடியாளர்கள் இன்று திணறுகிறார்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறை பகுதியில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். 11

மன்னார் துப்பாக்கிச் சூடு:

# முன்னாள் படை சிப்பாய்கள் இருவர் சந்தேகத்தில் கைது!

மன்னார், ஜன. 20

மன்னார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முன்னாள் இராணுவச் சிப்பாய்கள்.

கடந்த 16ஆம் திகதி மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டிருந்தனர். மேலும் இருவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

கடந்த சில வருடங்களின் முன்னர், மன்னார், உயி லங்குளத்தில் நடந்த இரட்டைக் கொலை 11

# முத்திரையிடாத தராசின் மூலம் நேற்று நெல் கொள்வனவு மோசடி

## கிளிநொச்சியில் மடக்கிப் பிடித்த மக்கள்

கிளிநொச்சி, ஜன. 20

கிளிநொச்சி, குமரபுரம் பகுதியில் முத்திரை இடப்படாத தராசைப் பயன்படுத்தி மோசடியான முறையில் நெல்லை கொள்வனவு செய்தவர்களை பிரதேச மக்கள் மடக்கி பிடித்து பிடித்துள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 11

# சீனாவை அடுத்து அமெரிக்கா பயணிக்கின்றார் அநுரகுமார!

கொழும்பு, ஜன. 20

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தனது அடுத்த வெளிநாட்டு விஜயமாக அமெரிக்கா செல்லவுள்ளதாக விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

அதன் பின்னர் ஜனாதிபதி ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார் என அவர் தெரிவித்தார். 11

# இலங்கைக்கு வருகிறார் பிரிட்டன் மூத்த அதிகாரி

லண்டன், ஜன. 20

பிரிட்டனின் இந்தோ பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுச் செயலர் கத்தரின் வெஸ்ட் இரண்டு நாள் உத்தியோகபூர்வமான விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தரும் அவர், ஜனாதிபதி 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பூச நன்னாளில் இருந்து திக்கம் வடிசாலை இயங்கும்!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

வடமராட்சி, ஜன. 20

**வடமராட்சி திக்கம் வடிசாலை எதிர்வரும் தைப்பூச நாளிலிருந்து இயங்கும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சகாதேவன், கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.**

இதேவேளை இறுதியாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவராகவிருந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபர் பல கோடி ரூபா பணத்தை கையூட்டாக பெற்று தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 25 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளதாகவும், அந்தக் குத்தகையையும் அமைச்சரவைப் பத்திரம் ஊடாக இரத்து செய்யவுள்ளதாகவும், பனை அபிவிருத்திச் சபை இவ்வாண்டு முதல் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களிடம் கையளிக்கப்படும் எனவும் அங்கு இடம் பெற்ற ஊழல்களுக்கு எதிராக நடவடிக்கை ஏடுக்கப்படும் எனவும் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மேலும் கூறினார்.

திக்கம் வடிசாலையை மீள இயங்குவதுக்கு தொடர்பான கலந்துரையாடல் திக்கம் வடிசாலையில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க கொத்தணி தலைவர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்ட மற்றும் சமூக உட் கட்டமைப்பு பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம், யாழ்.மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரும் பதிவாளருமான திருலிங்கநாதன், யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர்கள், பொது முகாமையாளர், பிரதிநிதிகள் மற்றும் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, ஆகிய கொத்தணிகளின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள், அனைத்து பனை தென்னை கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், திக்கம் வடிசாலை தலைவர், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-02)



# யாழில் மழை, காற்றால் 49 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணத்தில் பெய்த மழை மற்றும் வீசிய பலத்த காற்றினால் 49 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே-68 கிராம சேவகர் பிரிவில் 48 குடும்பங்களைச் சேர்ந்த 217 பேரும், ஜே-69 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 05 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 49 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்த அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். (அ)

# திமிங்கல ஆம்பருடன் யாழில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணத்தில் திமிங்கல ஆம்பரை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 58 வயது நபரே குருநகர் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 465 கிராம் ஆம்பர் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அதன் பெறுமதி சுமார் 20 இலட்சம் ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சீரற்ற காலநிலையால் நெற்செய்கை பாதிப்பு

கிளிநொச்சி, ஜன. 20

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சீரற்ற வானிலை மற்றும் இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டதன் காரணமாக மாவட்டத்தில் பல ஏக்கர் நெல் வயல்கள் அழிவடைந்துள்ளன.

இந் நிலையில் கதிர்களோடு நெல் முளைக்க ஆரம்பித்துள்ளதாகவும் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

# சீரற்ற வானிலையால் அறுவடை பாதிப்பு!

கொழும்பு, ஜன. 20

நாட்டில் தற்பொழுது நிலவும் சீரற்ற வானிலை காரணமாக விவசாயிகள் அரிசியை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில்-

சீரற்ற வானிலை காரணமாக அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் இருந்த பல ஆயிரக் கணக்கான ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கி தற்பொழுது பயிர்கள் முளைக்க ஆரம்பித்துள்ளன.

விதைத்த நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக விவசாய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு வெள்ளம் மற்றும் நோய்த் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வயல் நிலங்களை பார்வையிட்ட அதிகாரிகள் உரிய வகையில் தமக்கான அழிவுக்கு இழப்பீடு வழங்கவில்லை.

ஒரு சிலருக்கு மாத்திரமே அவர்களின் வங்கிக்கணக்கில் பணம் வைப்பில் இடப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு எந்த வித பதிலையும் வழங்காதுள்ளனர்.

இம்முறையும் பாரிய அளவிலான அழிவு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளான நாங்களும் தற்பொழுது அரசியை கடையிலேயே கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இம்முறையாவது விவசாய காப்புறுதி கூட்டுத்தாபனம் உரிய வகையில் பார்வையிட்டு எமக்கு ஏற்பட்டுள்ள அழிவுக்கான கொடுப்பனவை வழங்க வேண்டும் - என்றனர். (அ)


# பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரிப்பு நான்கு வான் கதவுகள் நேற்று திறப்பு!

## மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

வவுனியா, ஜன. 20

பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதானால் அதன் 4 வான் கவுகள் திறக்கப்பட்டுள்ளதால் அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.



பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை அடைந்துள்ளதால், அதன் நான்கு வான் கதவுகள் 6 அங்குலத்துக்கு திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவ குளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

அத்துடன், நெருக்குளம் - நேரியகுளம் வீதி ஊடாக பயணிப்பவர்களும் அவதானமாக போக்குவரத்தை மேற்கொள்ளுமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-10)

# கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை

மட்டக்களப்பு, ஜன. 20

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகக் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், இந்த நாட்களில் கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பரீட்சைகள் நடைபெறுவதால், இன்று நடைபெறவிருந்த தேர்வு பாடங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குளத்தில் தவறி விழுந்து 7மாத குழந்தை மரணம்!

கொழும்பு, ஜன. 20

வாதுவ தல்பிட்டிய பிரதேசத்தில் வீடொன்றின் முன்னே உள்ள சிறிய நீர் குளத்தில் விழுந்து ஒரு வயதும் 7 மாதமும் நிரம்பிய குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக வாதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தாயும் தந்தையும் வீட்டில் இருந்த தருணத்தில், வீட்டின் முன் திறந்தவெளியில் உள்ள நீர் குளத்தின் அருகே குழந்தை இருந்ததாகவும், சிறிது நேரத்தின் பின்னர் குழந்தையை காணவில்லை என தேடிய போதே குழந்தை நீரில் வீழ்ந்துள்ளமை தெரியவந்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

குழந்தையின் சடலம் பாணந்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 20.01.2025 திங்கட்கிழமை ஈழநாடு
பிலவ வருடம், தை 07

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தியா நண்பன் ஆனால், இலங்கை...?

இந்தியா, இலங்கையின் உண்மையான நண்பனாக இருந்திருக்கின்றது - இனியும் இருக்குமென்று, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்திருக்கின்றார். இலங்கை வரலாற்று ரீதியான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, வங்குரோத்து நிலைக்குள் முடங்கியபோது, இந்தியா எந்தவொரு நிபந்தனையுமின்றி 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி உதவியது. இதனை இலங்கையின் ஆட்சியாளர்கள் வரவேற்று பேசியிருந்தனர். ரணில் விக்கிரமசிங்க பல்வேறு சந்தர்ப்பங்களில் இதற்கு நன்றி தெரிவித்திருந்தார் - இந்தியாவின் உதவி இல்லாதிருந்தால் நாடு பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் என்பதையும் கொழும்பின் அரசியல் உயரடுக்கினர் புரிந்து கொண்டிருந்தனர். ஆனால், இதனால் எல்லாம் கொழும்பின் இந்தியா தொடர்பான அச்சம் கலந்த பார்வை இல்லாமல் போய்விடுமா என்றால் நிச்சயமாக இல்லை.

அநுரகுமார திஸநாயக்கவும் தவறில்லாமல் தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை புதுடில்லிக்கு மேற்கொண்டு, தான் இந்தியா தொடர்பில் தெளிவாக இருப்பதான ஒரு செய்தியை வெளிப்படுத்தியிருந்தார் - ஆனால், இதனைக் கொண்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எல்லா விடயங்களிலும் இந்தியாவுடன்தான் நிற்குமென்று புதுடில்லி கணிக்குமானால், அது சிக்கலானதாகவே அமையும். புதுடில்லி உண்மையான நண்பனாக இருக்கலாம் - அப்படிச் சிந்திக்கலாம் - எப்போதும் அப்படிச் சிந்திப்பதற்கான உறுதியை கொண்டிருக்கலாம் - ஆனால், கொழும்பு எப்போதும் இந்தியாவுக்கு மட்டும் உண்மையான நண்பனாக இருக்கும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியதில்லை - வெளிப்படுத்தப் போவதுமில்லை. இதனை புதுடில்லியால் புரிந்து கொள்ள முடிகின்றதா என்பதுதான் பிரச்னையானது.

கொழும்பைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கு நண்பனாக இருக்கும் அதேவேளை, சீனாவுக்கும் நண்பனாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது. இந்த இடத்தில் இந்தியா எந்தளவு உண்மையான நண்பனாக இருக்கின்றது என்பது, நிச்சயம் ஓர் அளவுகோலாக இருக்கப் போவதில்லை.

கடந்த காலத்தில் இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் புதுடில்லி கொழும்புடன் நின்றிருக்கின்றது ஆனால் இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தின் போது கொழும்பு இந்தியாவுடன் நிற்கவில்லை - நாங்கள் அணிசாராதவர்கள் என்னும் சுலோகத்தின் கீழ் பாகிஸ்தான் யுத்த விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்கு இலங்கையின் விமான நிலையத்தை பயன்படுத்துவதற்கு அனுமதித்து, எங்களுக்கு பாகிஸ்தானும் நண்பன்தான் என்னும் நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தது.

ராஜபக்ஷக்களின் கட்டுப்பாட்டில் நாடு இருந்த போது, கொழும்பு முற்றிலுமாக, இந்திய நலன்களுக்கு எதிராகவே செயல்பட்டது. இலங்கை அதன் செயல்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு நடுநிலை, அணிசாரா என்னும் திரைகளுக்கு பின்னால் வசதியாக ஒழிந்து கொள்ளும். இதுதான் இதுவரையான வரலாறு. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இந்தியா எந்தளவு நண்பனான இருக்கின்றது இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு விடயமே அல்ல - இதனை கட்டாயம் இந்தியத் தூதுவர் புரிந்துகொள்ள வேண்டும்.

# வவுனியா நெளுக்குளத்தில் பண்பாட்டு பொங்கல் விழா




வவுனியா, ஜன.20
வவுனியா நெளுக்குளம் சிறீ முருகன் ஆலயத்தின் ஏற்பாட்டில் பண்பாட்டுப் பொங்கல் பெருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் தலைவர் சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ப. சத்தியலிங்கம், முத்துமுகமது, வவுனியா அரசாங்க அதிபர் சரத் சந்திர உள்ளிட்ட விருந்தினர்கள் நெளுக்குளம் சந்தியிலிருந்து அழைத்து வரப்பட்டு பல் வேறு பண்பாட்டு கலை கலாசார விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதன்போது பொங்கல் பானைக்கு அரிசி போட்டு சம்பிரதாயமாக பொங்கல் ஆரம்பிக்கப்பட்டு அதன் பின்னர் தமிழர்களின் பண்பாட்டு கலையான கூத்து கலையில் உழவர் பொங்கல் நடைபெற்றது.

இதனையடுத்து பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன. (எ-10)

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு



வடமராட்சி,ஜன.20
சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவை நடத்தும் வாராந்த நிகழ்வில் கடந்த வெள்ளிக்கிழமை தெய்வீக இன்னிசை கானம் நடைபெற்றது.

திருமதி ஜெயபாரதி கௌசிகன் குழுவினர் இன்னிசை கானம் நிகழ்ச்சியை வழங்கினர்.

இதைவேளை, பூநகரி மகா வித்தியாலயத்தில் தரம் - 11 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-02)


# கோப்பாய் மக்களுடன் றஜீவன் எம்.பி. சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன.20
கோப்பாய் பிரதேசத்தில் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் கேட்டறிந்து கொண்டார்.

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பிரதேச மக்களின் வாழ்வாதாரத் தேவைகள், கல்வி, வேலைவாய்ப்பு, நீர்ப்பாசனப் பிரச்னைகள், விவசாயம், அடிப்படை வசதிகளின் குறைபாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மக்களின் குறைகளை தீர்க்கும் நோக்கில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. (எ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். உறவினர்கள் நண்பர்கள் உங் களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள்.

**இடபம்**

குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர் கள். குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற் சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது சலு கைகளை அறிவிப்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**

பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். யோகா தியானத்தில் மனம் செல்லும். உயர்வு பெறும் நாள்.

**கடகம்**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக் கறை காட்டுவார்கள். அதிகாரப்பதவியில் இருப் பவர்கள் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்**

எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புது நட்பு மலரும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியா பாரத்தில் வேலையாட்களிடம் பணிவாகப் பேசி வேலை வாங்குங்கள்.

**துலாம்**

கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். உழைக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**

எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விசேஷ ங்களை முன்னின்று நடத்துவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**தனுசு**

உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உறவினர் நண்பர்களின் வருகையால் உற்சா கம் அடைவீர்கள். உங்களால் பயனடைந்தவர் கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**மகரம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசு வீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். சிலர் உங் களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்ப டைப்பார்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

**கும்பம்**

அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண் டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச் சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும்.

**மீனம்**

பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள் வார்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங் குவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். தாயாரின் உடல் நிலை சீராகும்.

### குருநகரில் கடும் காற்று

# மாதா ஆலயம், பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன!




யாழ்ப்பாணம், ஜன.20

குருநகரில் நேற்றுக் காலை 06. 45 மணியளவில் வீசிய பலத்த காற்றால் கொலை விலக்கி மாதா ஆலயம் மற்றும் பல வீடு களின் கூரைகள் தூக்கி வீசப் பட்டு சேதமாக்கப்பட்டன.

இந்த அனர்த்தத்தால் 30 இற் கும் மேற்பட்ட வீடுகள் பகுதிய ளவிலும் புனித கொலை விலக்கி மாதா ஆலய திருப்பண்ட அறை கள் முற்றாகவும் சேதம டைந்தன. அத்தோடு சில பட குகளும் பகுதியளவில் சேதம டைந்தன.இதேவேளை, பாதிக் கப் பட்ட குடும்பங்கள் பாது காப்பான இடங்களில் தங்கி யுள்ளனர். இந்த நிலையில், கடும் காற்றால் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் மாதா ஆலயத்தை அமைச்சர் இ. சந்திரசேகர் சென்று பார்வையிட் டார். அத்தோடு, பாதிக்கப்பட்ட மக்களுடனும் கலந்துரையாடினார். (எ-05)

# யாழில் பனைசார் உற்பத்தியாளர்கள் பிரதி அமைச்சர் பிரதீப்புடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பெருந்தோட்ட பிரதி அமைச்சர் சு. பிரதீப்புடன் பனைசார் உற்பத்தியாளர்கள் மற்றும் பனம் பொருள் ஏற்று மதியாளர்கள், பனை அபிவி ருத்திச் சபைத் தலைவர் வி. சகா தேவன் தலைமையில் சந்தித் தனர்.

கைதடியில் உள்ள பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கி ழமை இந்தச் சந்திப்பு நடை பெற்றது.

இதன்போது, பனை சார் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற் றுமதியாளர்கள் தாம் எதிர் நோக்கின்ற பிரச்னைகள் தொடர்பில் பெருந்தோட்ட பிரதி அமைச்சர் பிரதீப்பிடம் எடுத்துரைத்தனர். இந்தச் சந் திப்பில் கடற்றொழில் அமைச் சர் இராமலிங்கம் சந்திரசேகரும் கலந்து கொண் டார். இதன்போது, பிரதி அமைச்சர் உள்ளிட்ட விருந் தினர்களுக்கு பனைசார் உற் பத்திப் பொருட்கள் வழங் கப்பட்டன. (எ- 05)

# ஆசிரியர்களின் இடமாற்ற பிரச்னைக்கு உரிய தீர்வு வழங்கக் கோரி போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.20

ஆசிரியர்களின் இடமாற் றத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிடின் தொடர்ச்சியான போராட் டத்தையும், யாழ். நகரில் ஊர் வலத்தையும் முன்னெடுப்பதற்கு இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கம் தயாராகி வருவதாக அந் தச் சங்கத்தின் பொதுச் செயலா ளர் சிறிகந்தநேசன் புயல்நேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் ஆண்டு தோறும் இடமாற்றம் நடைபெறுகின்றது. இவ்வாறு நடைபெற்றாலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களிலே பணிசெய்து பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் வெளிமா வட்ட சேவையை நிறைவு செய்த ஆசிரியர்கள் பலர் உள்ள னர். இருப்பினும் குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் நியமனம் பெற்ற ஆசிரியர்கள், வெளிமா வட்ட சேவையை 8 அல்லது 10 வருடங்கள் செய்து கொண்டி ருக்கின்றனர். இதனால் அவர் கள் உள நெருக்கடிக்கும் பாதிப் புக்கும் உள்ளாகியுள்ளனர்.

இடமாற்ற சபையிலே தீர்மானம் எடுக்கப்படுகின்ற போது தேசிய இடமாற்ற கொள்கையை அடிப்படையாக வைத்து அதற்கேற்ப இந்த இட மாற்றம் வழங்கப்படுவதில்லை.

வடக்கு மாகாணத்தில் அண் ணளவாக 17 ஆயிரத்து 500 ஆசிரியர்கள் உள்ளனர்.

இவர் களில், 80 சதவீத மானவர்கள் பெண் ஆசிரி யர்கள்.

அவர்கள் மடு, முல்லைத் தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு - தெற்கு போன்ற அதிகஷ்ட பிரதேசங்களில் மிகவும் இன்னல்களை சந்திக் கின்றனர். -என்றார். (எ-05)

# 12 வாகன பற்றிகளுடன் ஒருவர் கைது வவுனியாவில் வாகனமும் பறிமுதல்!

வவுனியா, ஜன.20

வவுனியா, நெளுக்குளம் பகு தியில் 12 வாகன பற்றிகளை மகேந்திரா ரக வாகனத்தில் ஏற்றிச் சென்ற ஒருவரை கைது செய்ததுடன், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக நெளுக் குளம் பொலிஸார் தெரிவித் தனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். கே. திவுல்வெவ தலைமையி லான பொலிஸ் குழுவினர் நெளுக்குளம் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போதே 12 வாகன பற் றிகளையும் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாகன உரிமையாளர்கள் பற்றிகள் எவையும் களவாடப் பட்டுள்ளமை தொடர்பில் உட னடியாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலோ அல்லது அரு கில் உள்ள பொலிஸ் நிலையத் திலோ முறைப்பாட்டினை செய்யுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகளை நிறைவேற்றும் அடித்தளம் அரசிடம் கிடையாது!

## பேராசிரியர் வசந்த அத்துக்கோரள சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 20

**ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பார்க்கும்போது, தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அடித்தளத்தை அமைக்கத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிவர ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-அவர்கள் தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வெவ்வேறான வாக்குறுதிகளை வழங்கியது மாத்திரமன்றி கொள்கை விளக்கவுரையிலும் வெவ்வேறான விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

2025 பட்ஜெட்டில் குறித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அடிப்படை அடித்தளத்தை இட வேண்டிய கட்டாயம் இருந்தது. எனினும், அவ்வாறான அடித்தளத்தை தயாரிப்பதற்கான தயார் நிலை ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பார்க்கும் போது எங்களுக்கு தெரியவில்லை.

உண்மையிலேயே, அரசாங்கத்திற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் வழிக்காட்டல்களுக்கு அமைவாக திட்டமிடவேண்டிய நிலை உள்ளது என்பது உண்மை.

சர்வதேச நாணய நிதியமும் ஒரு சில வழிக்காட்டல்களை வழங்கியுள்ளன. உண்மையிலேயே, எங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய வழிக்காட்டல்களை விட முன்னோக்கி செல்ல முடியும். எனினும், பின்னோக்கி பயணிக்க முடியாது. இந்தப் புரிதலுடன் பொருளாதார வல்லுநர்கள் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

உண்மையில், கடந்த நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் பொருளாதாரம் ஒரு நல்ல அடித்தளத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

இப்போது அந்த நிலையான பொருளாதாரத்தை வளர்ச்சியடைய செய்ய வேண்டும்.

நாங்கள் உண்மையிலேயே எதிர்பார்ப்பது அதற்கான வளர்ச்சிக்கான பட்ஜெட்டைத் தான். அரசாங்கம் அதை நோக்கிச் செயல்பட வேண்டும் என்பது எனது கருத்து-என்றார். (அ)

# அநுர கொண்டுவந்த சீன முதலீடுகளால் மகிழ்ச்சி!

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜன. 20

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நிர்மாணிக்கும்போது பாரிய கல் இருப்பதாகக் கூறி விமர்சனங்களை முன்வைத்த தேசிய மக்கள் சக்தியினர், இன்று அந்த துறைமுகத்துக்காக சீனாவில் இருந்து பாரிய முதலீட்டை கொண்டுவந்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கான முதலீடுகள் தொடர்பில் அன்று நாம் பேச்சு நடத்தியபோது அதற்கு எதிராக தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அன்று கடும் விமர்சனங்களை முன்வைத்தார். துறைமுகத்தில் பாரிய கல் இருப்பதாகவும் கூறினர். இலங்கையை சீனாவின் கொலனியாக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்கள்.

அன்று அவ்வாறு விமர்சித்த துறைமுகத்துக்காக இன்று பாரிய முதலீடுகளை கொண்டுவந்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகள் வருவதை நாம் வரவேற்கின்றோம்.

அநுர அரசு ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் கடந்துவிட்டன. ஆனால் அபிவிருத்தித் திட்டங்கள் இன்னும் ஆரம்பமாகவில்லை. உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் நாம் அனைத்து சபைகளுக்கும் போட்டியிடுவோம். தனித்தும், கூட்டணி அமைத்தும் களமிறங்குவோம்-என்றார். (அ)

# களஞ்சியசாலை உடைத்து 450 தேங்காய்கள் திருட்டு

கொழும்பு, ஜன. 20

தென்னந்தோட்டத்தில் உள்ள களஞ்சியசாலையின் கதவு உடைக்கப்பட்டு 450 தேங்காய்கள் திருடப்பட்டுள்ள சம்பவம் பிபில பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

பிபில பொலிஸ் பிரிவின் மஹியங்கனை வீதிக்கு அருகிலுள்ள தென்னந்தோட்டத்தில் இருந்து 65 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 450 தேங்காய்கள் திருடப்பட்டுள்ளதாக பிபில பொலிஸார் தெரிவித்தனர்.

தேங்காய்களுடன், தேங்காய்களை உரிக்கப் பயன்படுத்தப்பட்ட இரும்புத் தூண் மற்றும் மண்வெட்டியும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மொனராகலை நகரைச் சேர்ந்த நில உரிமையாளர் தென்னை நிலத்தைப் பார்வையிட்டபோது, களஞ்சியசாலையின் கதவு உடைக்கப்பட்டு காலியாக இருந்தது. அங்கிருந்து தேங்காய்களை களவாடி சென்றுள்ளமை அடுத்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. (அ)

# டிஜிற்றல் மயப்படுத்தப்பட்ட ஓய்வூதியத் திணைக்களம்!

கொழும்பு, ஜன. 20

ஓய்வூதியத் திணைக்களம் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டு வருவதுடன், இதற்காக புதிய கட்டமைப்பொன்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

கொழும்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த ஒருங்கிணைந்த கட்டமைப்பில் பல அரசு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து ஐந்து துறைகளின் கீழ் இதற்கான பணிகள் இடம்பெறும்.

ஓய்வூதியத் துறையின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளை ஓய்வு பெற்றவர்களுக்கு மிகவும் திறமையான மற்றும் நட்பு முறையில் வழங்குவதே இந்த டிஜிற்றல் கட்டமைப்பின் நோக்கம் என்று அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன கூறினார்.

டிஜிற்றல் கட்டமைப்பின் ஊடாக புதிய இணையத்தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ரயில், பஸ்களில் பயணிக்கும் ஓய்வூதியர்களுக்கு பயணச்சீட்டு ஒன்று பெற்றுக்கொடுக்கப்பட உள்ளது. விதவை மற்றும் அநாதைத் திட்டத்துக்கான பதிவு மற்றும் தகவல் அமைப்பு, பொது ஊழியர் வருங்கால வைப்பு நிதி செயல்முறை, ஓய்வூதியர் இறப்பு சான்றிதழை இலகுவாக பெறும் முறை என பல்வேறு விடயங்கள் புதிய டிஜிற்றல் கட்டமைப்பில் உள்வாங்கப்பட உள்ளது. (அ)

# நுவரெலியா -உடபுசல்லாவ வீதி நீரில் மூழ்கும் அபாய நிலைமை!

கொழும்பு, ஜன. 20

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வீடுகள், விவசாய நிலங்கள் மற்றும் போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக நுவரெலியா - உடபுசல்லாவ பிரதான வீதியில், கந்தபளை புதிய வீதி பகுதியில் வெள்ள நீர் வீதியினை கடந்த செல்வதனால் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் நுவரெலியா கந்தபளை பகுதியில் விவசாயம் செய்யும் தாழ் நிலங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரினால் அறுவடைக்கு தயாரான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறனர்.

இப்பகுதியில் கால்வாய்கள் முறையாக புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்படாததின் காரணமாக அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாய நிலங்களும் நீரில் மூழ்குவதாக விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்தோடு அப்பகுதியில் மேக மூட்டமாக காணப்படுவதால் சாரதிகள் வாகனங்களின் முகப்பு விளக்குகளை ஒளிரச் செய்தவாறு பயன்படுத்துவதன் மூலம் விபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என போக்குவரத்து அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 2,293 கொள்கலன்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 20

கடந்த 24 மணி நேரத்தில் 2,293 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்கு முடிவடைந்த 24 மணி நேரத்திற்குள் இந்தக் கொள்கலன்கள் பிரதான முனையத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாக அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது

இதற்கிடையில், இலங்கை சுங்கத்தால் அகற்றப்பட்டு துறைமுக வாயில்கள் வழியாக 2,074 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், முனையங்களை விட்டு வெளியேறும் அளவை விட வாயில்களில் இருந்து வெளியேறும் அளவு குறைவாக இருப்பதால் கொள்கலன் நெரிசல் குறையவில்லை என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு , துறைமுகத்தில் சிக்கிய கொள்கலன்களில் ஒரு குறிப்பிட்ட அளவை உரிய நேரத்தில் விடுவிக்க துறைமுகம் மற்றும் சுங்கத் துறைகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாட்டில் உற்பத்தி,சேவை நடவடிக்கைகள்

கொழும்பு, ஜன. 20

நாட்டில் உற்பத்தி மற்றும் சேவை நடவடிக்கைகள் கடந்த டிசெம்பர் மாதத்தில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

புதிய கொள்வனவுக் கட்டளைகள், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, உற்பத்தித் துறைக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 57.2 ஆகப் பதிவு செய்யப்பட் டுள்ளது.

(அ)

# மர்ம உருவத்தால் அச்சத்தில் மக்கள்!

கொழும்பு, ஜன. 20

பதுளை மாவட்டம் ,மீகஹகிவுல பகுதியில் சுற்றித் திரிவதாகக் கூறப்படும் ஒரு பெண் உருவத்தால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண்ணின் உருவம் மாலையிலும் , இரவிலும் வீதி ஓரங்களில் மக்களையும், முச்சக்கர வண்டிகளையும் பின் தொடர்வதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக மீகஹகிவுல, பஹல்கெதர மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மக்கள் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிக்கப்பட்டது.

முச்சக்கர வண்டி சாரதிகள் , கிராம மக்கள் பலர், இந்த மர்ம உருவத்தை அப்பகுதியில் வீதி ஓரங்களில் பார்த்துள்ளதாகவும் , இதுவரை அந்த மர்ம உருவத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு நீதி வழங்குவது அரசாங்கத்தின் நோக்கம்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜன. 20

**சலுகைகள் மற்றும் ஆதரவின் அடிப்படையில் நீதி கிடைக்காமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**



சீன மக்கள் குடியரசின் முழுமையான நிதி உதவியின் கீழ் புனரமைக்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற கட்டடத்தை பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, ஒரு நாட்டின் நீதி முறைமையில், நாட்டு மக்களுக்கு நீதி வழங்குவதற்கான வசதிகளுக்காக செய்யப்படும் முதலீடு நாட்டுக்கும் அதன் மக்களுக்குமான அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும்.

இது வெறுமனே ஒரு கட்டடம் மட்டுமல்ல, இது நீதி, சமத்துவம் மற்றும் கண்ணியத்தின் சின்னமாகும்.

சலுகைகள் மற்றும் ஆதரவு முறைமைகளின் கீழ் பலருக்கு நீதி மறுக்கப்படுவதால் நமது நாடு பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்டுள்ளது, அந்த தவறுகளை சரிசெய்து, கடந்த கால அநீதிகளை சரிசெய்வதும், அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதுமே எங்கள் நோக்கமாகும்.

அத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வ அதிகாரத்தை நியாயமான முறையில் பயன்படுத்துவதன் மூலமும், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சுதந்திரமான மற்றும் நியாயமான தீர்ப்பை வழங்குவதன் மூலமும் மக்கள் நீதித்துறையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

பெண்கள், சிறுவர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைவரும் நீதியை எதிர்பார்க்கின்றனர். இதன்போது யாருக்கும் கஷ்டம் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்யவும், மன நிலைகளில் கவனம் செலுத்தவும், அவர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதில் அல்லது அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவர்கள் எதிர்கொள்ளும் விளைவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த செயற்பாட்டில் அனைத்து செயற்பாட்டாளர்களும் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். நீதிக்காக பல ஆண்டுகளாக சிரமங்களை சந்திக்கும் மக்கள் உள்ளனர். அவர்களின் நீதிக்காக அவர்களுக்கு கிடைக்கவேண்டிய கரிசனையை நாங்கள் உறுதி செய்கிறோம். நீதிக்காக அவர்கள் அச்சுறுத்தல் அல்லது அடக்குமுறை அல்லது துன்புறுத்தலுக்கு ஆளாகக் கூடாது.

மேலும் மக்கள் சீனக் குடியரசின் பெருந்தன்மைக்கும் இந்நாட்டு மக்களுக்கான நீதிக் காக அவர்கள் வழங்கிய ஆதரவுக்கும் நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறோம்-என்றார்.

இந்த நிகழ்வில் சீன தூதுவர் கியூ சென் ஹொங், பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ)

# 2 பஸ்கள் மோதி 35 பேர் காயம்!



கொழும்பு, ஜன. 20

மாத்தறை-தங்காலை பிரதான வீதியில் கந்தர, தலல்ல பகுதியில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டியவிலிருந்து மாத்தறைக்கும், மாத்தறையிலிருந்து தங்காலைக்கும் பயணித்த இரண்டு பஸ்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளன.

இந்த விபத்தில் 35 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 29 பேர் கந்தர மருத்துவமனையிலும், மேலும் 6 பேர் மாத்தறை மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# சேனாநாயக்க சமுத்திர வான் கதவுகளை திறப்பு

கொழும்பு, ஜன. 20

கனமழை காரணமாக சேனாநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு முதல் மகாவலி ஆற்றின் சில பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக, மகாவலி ஆற்றுப் படுகையின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

திம்புலாகல, ஈச்சிலம்பற்று, ஹிங்குராக்கொடை, கந்தளாய், கிண்ணியா, கோறளைப்பற்று வடக்கு, லங்காபுர, மெதிரிகிரிய, மூதூர், சேருவில, தமன்கடுவ, தம்பலகாமம் மற்றும் வெலிகந்த ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளின் மகாவலி ஆற்றின் கரையோர தாழ்நிலப் பகுதிகளுக்கு இந்த எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (அ)

# ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் மருந்தின் தரம் உயர்வாக பேணப்படுவது அவசியம்!

கொழும்பு, ஜன. 20

உயர்தர ஆயுர்வேத மருத்துவப் பொருட்கள் ஆயுர்வேத மருத்துவத் துறையை மேம்படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருக்கும், மேலும் இது ஆயுர்வேத மருத்துவ சிகிச்சையை அணுகும் மக்களுக்கு சிறந்த உள்ளூர் மருத்துவ சிகிச்சையைப் பெறுவதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது என சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் எதிர்கால திட்டங்களை அறிமுகம் செய்து பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கும் நோக்கில் நாவின்னவில் அமைந்துள்ள இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபன வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித் தொழிற்சாலையின் அனைத்து அம்சங்களையும் அமைச்சர் பார்வையிட்டதுடன், இயந்திரங்களைப் பழுதுபார்த்தல், புதிய உற்பத்தி இயந்திரங்களை கொள்வனவு செய்தல், சோலார் பனல்கள் போன்ற உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அவசர நடவடிக்கைகளையும் ஆராய்ந்தார். அத்துடன் தேவையான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வு நடத்தப்பட்டது.

குறிப்பாக, இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் அனைத்துப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் பானங்கள், வலி நிவாரணிகள், சுகாதாரப் பொருட்கள் போன்றவற்றை போட்டிச் சந்தையில் சமர்ப்பித்தல் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பில் அமைச்சர் அதிகாரிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கினார். (அ)

# இலங்கைக்கு 9ஆம் இடம்!

கொழும்பு, ஜன. 20

2025 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது சிறந்த சுற்றுலா இடமாக இலங்கையை இங்கிலாந்தை தளமாகக் கொண்ட செய்தி நிறுவனமான பிபிசி தேர்ந்தெடுத்துள்ளது.

இது சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான நாட்டின் முயற்சிகளுக்கு மேலும் அங்கீகாரம் அளிப்பதாக அமைந்துள்ளது.

பிபிசி தனது சிறந்த 25 இடங்களின் வெற்றியாளர்களை அறிவிக்கையில், மூடுபனி படர்ந்த மலை உச்சியில் உள்ள தேயிலை தோட்டங்கள் மற்றும் அதன் பழங்கால ஆலயங்கள் வரை சுற்றித் திரியும் காட்டு யானைகள் மற்றும் நீர்ச்சறுக்கு போன்ற அநேகமான பார்வையிடங்களை இலங்கை கொண்டுள்ளதாகக் கூறியது.

இந்தப் பட்டியலில் இலங்கை ஒன்பதாவது இடத்தில் உள்ளதுடன், முதல் 10 இடங்களில் உள்ள ஒரே தெற்காசிய நாடாக இலங்கை பெருமை அடைகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முக்கிய வருமான ஆதாரமான சுற்றுலாத் துறை, 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் தொற்று காரணமாக கடுமையான சரிவைச் சந்தித்தது.

எனினும், இத்தகைய பின்னணியில், நாட்டின் சுற்றுலாத் துறையை உலகளவில் மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்கள் தொடங்கப்பட்டதன் விளைவாக, கடந்த ஆண்டில் மாத்திரம் 2 மில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமையும் விசேட அம்சமாகும். (அ)

# நேற்றும் பல ரயில் சேவைகள் இரத்து!

கொழும்பு, ஜன. 20

நேற்றும் பல ரயில் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று 15 குறுகிய தூர ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ரயில் சாரதிகள் இரண்டாம் தரத்தில் இருந்து முதலாம் தரமாக பதவி உயர்வு பெறுவதற்கான பரீட்சை நேற்று நடைபெற்றது. இதன் காரணமாக உண் டான ரயில் சாரதிகளின் பற் றாக்குறையால் கடந்த இரு நாட்களாக பல ரயில் பயணங் கள் இரத்து செய்யப்பட்டன.

இதேவேளை, நேற்று பிற்பகல் 3 மணிக்குப் பின்னர் ரயில் பயணங்களை இரத்துச் செய்வதை மீளப்பெற முடியும் என இலங்கை ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# ஆற்றில் கவிழ்ந்தது கார் இரண்டு பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 20

கண்டி, பன்வில பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பன்வில பகுதியில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி ஆற்றில் பாய்ந்ததில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் உயிரிழந்தவர்கள் ஆண் மற்றும் பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறு ஆட்சி செய்வது என்பது அரசாங்கத்துக்கு தெரியவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 20

**வாக்குறுதியளிக்கப்பட்ட உர மானியத்தையும், 33 சதவீத மின்சாரக் கட்டணக் குறைப்பையும் அரசாங்கத்தால் வழங்க முடியாது போயுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

மக்களின் நலனுக்காக எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பது தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்கமுவ வாராந்த சந்தைத் தொகுதி வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விவசாயிகளுக்கான 25000ரூபாய் உர மானியம் இன்னும் சரியாக வழங்கப்படவில்லை. கடந்த பாராளுமன்ற அமர்விலும் இது குறித்து கேள்வி எழுப்பினேன். இன்னும் இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 40வீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

விதைக்கும் காலம் என்பதால் உர மானியத்தை உடனடியாக வழங்க வேண்டும். பேச்சுக்கும் செயலுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தேர்தலுக்கு முன்னர் 33சதவீதம் மின் கட்டணம் குறைக்கப்படும் என கூறப்பட்ட போதும், அதனை 37சதவீதம் அதிகரிக்க முன்மொழிந்துள்ளதாக மின்சக்தி அமைச்சர் தெரிவித்தார்.

6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என மின்சார சபை கூறிய போது, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மக்கள் ஆலோசனைகளை பெற்று, மின் கட்டணத்தை 20சதவீதம் குறைத்திருக்கிறது.

தேர்தலின் போது ஒரு கதையைச் சொல்லி, இப்போது இன்னுமொரு கதையைச் சொல்லி மக்களின் பலமான கோரிக்கையைக்கூட புறக்கணிக்கும் நிலையை அரசு எட்டியுள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கும் தெளிவான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. மக்களின் நலனுக்காக எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பது தெரியவில்லை-என்றார். (அ)

## ஊடக திறன்மேம்பாட்டுக்கு புதிய அமைப்பு!



கொழும்பு, ஜன 20

இலங்கையில் ஊடகத்துறையை மேம்படுத்தும் நோக்கில் புதிய ஊடக அமைப்பு உருவாக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாராஹேன்பிட்டி ஊடக அமைச்சில், ஊடகவியலாளர் சபை உறுப்பினர்களுடன் நடந்த கலந்துரையாடலில், ஊடகவியலாளர்களின் திறமைகளை மேம்படுத்தும் திட்டங்கள், 1973 ஆம் ஆண் டின் பத்திரிகைச் சட்ட திருத் தம், மற்றும் சுற்றல் நெறிகள் தொடர்பில் ஆலோசிக்கப் பட்டது.

இதனை தொடர்ந்து முன்னைய அரசாங்கங்கள் இதை மேற்கொள்ள முயன்றும் நிறைவேற்றவில்லை என்றும், புதிய அமைப்பின் மூலம் ஊடக வியலாளர்களின் கல்வித் தரம், ஒழுக்க நெறிகள், மற்றும் தொழில்திறன் மேம்படுத்தப் படும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## நீர்க் கட்டணங்கள் மறுசீரமைப்பு

கொழும்பு, ஜன. 20

மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ள நிலையில், நீர்க் கட்டணங்களை மறுசீரமைப்பது தொடர்பிலும் பரிசீலிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி.சரத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆராய்வதற்காக ஏற்கனவே குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நீர் கட்டண திருத்தம் தொடர்பான அறிவியல் ரீதியான விடயங்களைக் கலந்துரையாடி, இறுதித் தீர்மானம் எட்டப்படும் என பிரதி அமைச்சர் தெரிவித்தார். (அ)

# இனிப்புப் பண்டங்களின் தரம் குறித்து ஆராய்வதற்கு முறைமை ஒன்று தேவை

## விசேட வைத்தியர் சுரந்த பெரேரா

கொழும்பு, ஜன. 20

இறக்குமதி செய்யப்படும் இனிப்பு பண்டங்கள் மற்றும் உணவுகளின் தரம் தொடர்பில் ஆராய்வதற்கான முறைமை ஒன்று தயாரிக்கப்படவேண்டும் என இலங்கை மருத்துவ சபையின் தலைவர் விசேட வைத்தியர் சுரந்த பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைக் குறிப்பிட்ட அவர் தரமற்ற உணவுகளை உட்கொள்வதன் காரணமாக நுகர்வோர் இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

இதுதவிர, உணவு ஒவ்வாமை, சுவாச நோய் உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு மக்கள் முகங்கொடுக்கின்றனர்.

எனவே சந்தைக்குக் கொண்டு வரப்படும் இனிப்புப் பண்டங்கள் மற்றும் உணவுகளின் தரம் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப் படவேண்டும்.

இல்லையெனில் அவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியாது என இலங்கை மருத்துவ சபையின் தலைவர் விசேட வைத்தியர் சுரந்த பெரேரா கூறினார். (அ)

## சதொச விற்பனை நிலையங்களை நாடு முழுக்க அதிகரிக்க தீர்மானம்!

கொழும்பு, ஜன. 20

நாடு முழுவதும் உள்ள சதொச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் ஆயிரமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் புதுப்பிக்கப்பட்ட சதொச விற்பனை நிலையம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றிய அமைச்சர், இந்த ஆண்டில் 150 சதொச விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (அ)

# மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்

கொழும்பு, ஜன. 20

மலையக மக்களுக்கான உரிமைகள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு இல்லையேல் வீதியில் இறங்கி போராட தயங்க மாட்டோம் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் எச்சரிக்கை விடுத்தார். நேற்று ஹட்டனில் கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு கூறினார். (அ)

## வீதியின் குறுக்கே வீழ்ந்த மரம்



திருகோணமலை, ஜன.20

திருகோணமலையில் இரண்டு நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக நேற்றுக்காலை உப்புவெளி சாலைக்கு அண்மையில் நீண்டகால வரலாற்றை கொண்ட மரம் ஒன்று வீதியின் குறுக்காக வீழ்ந்தது.

இதனால், அப்பகுதியினூடான போக்குவரத்து தடைப்பட்ட நிலையில் மின்சார சபையினர் மற்றும் திருக்கோணமலை நகராட்சி மன்ற செயலாளர் தே. ஜெய விஷ்ட்ணுவின் பணிப்புரைக்கு அமைய திருக்கோணமலை நகராட்சி மன்ற அனர்த்த விசேட அதிரடிப்படை குழுவினரால் மரத்தை உடன் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## நெற் களஞ்சியசாலைகள் இராணுவத்தால் துப்புரவு

கொழும்பு, ஜன. 20

நாடு முழுவதுமான நெல் களஞ்சியங்கள் துப்புரவு பணிகளில் நேற்று முன் தினம் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், நாடு முழுவதும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் "தூய இலங்கை" தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த பெரும்போக பருவத்தின் நெல் அறுவடையை கொள்முதல் செய்வதற்கான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

ஆத்துடன், நெல் கொள்முதல் செய்த பிறகு, நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான 209 நெல் களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான நெல் களஞ்சியசாலைகள் மற்றும் சுற்றியுள்ள நிலம் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், அவற்றைப் பயன்படுத்த ஏற்றதாக மாற்றவும், சிறிய பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளவும் அவற்றைச் சுத்தம் செய்ய வேண்டியுள்ளதுடன் தேசிய நலனுக்காக பாதுகாப்புப் படையினர் ஆதரவு வழங்கும் வகையில் துப்பரவு பணி முன்னெடுக்கப்பட்டது. (அ)

## கல்கிஸையில் துப்பாக்கி சூடு!

கொழும்பு, ஜன. 20

கல்கிஸை, சிறிபால மாவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் நபரொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர், சிகிச்சைக்காக களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நபரொருவர் கைது செய்யப் பட்டுள்ள நிலையில், கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுத்திர வான்கதவு திறப்பால் வெள்ளத்தில் மூழ்கிய வீதிகள்!

அம்பாறை மகா ஓயா வீதி போக்குவரத்து தடை

கல்முனை, ஜன.20

நாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை திறக்கப்பட்டன. இதனால், பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின. போக்குவரத்தும் தடைப்பட்டன.




இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் தாழ்நிலப் பிர தேசங்கள் எல்லாம் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

அத்தோடு, அம்பாறை மகா ஓயா வீதியில் மங்களகம எனும் இடத்தில் பிரதான வீதி நீரில் மூழ்கியது.

இவ் வீதியால், போக்குவரத் துக் செய்வோர் மாற்று வழி களைப் பயன்படுத் துவது உகந் தது எனத் தெரிவிக்கப்பட் டுள் ளது. (எ)

## காரைதீவு நேரு சனசமூக நிலைய பவள விழா ஏற்பாடுகள் மும்முரம்



காரைதீவு, ஜன.20

காரைதீவு நேரு சனசமூக நிலையத்தின் வருடாந்த ஒன்று கூடல் மற்றும் 75 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கான பெயர் பலகை திறப்பு என்பன நேற்று முன்தினம் சனிக்கிழமை நிலைய வளாகத்தில் நடைபெற்றன.

இந்த நிலையத்தின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் முன் னெடுப்பில் நடைபெற்ற நிகழ் வுகளில் நிலையத்தின் போசகர், கலாபூஷணம் எஸ். நாகராசா உள்ளிட்டவர்கள் கௌரவிக் கப்பட்டனர். (எ)

## சாரண ஆணையாளர்களுக்கு ஒரு நாள் விசேட செயலமர்வு



கல்முனை,ஜன.20

இலங்கை சாரணர் சங்கத் தின் ஏற்பாட்டில் உதவி மாவட்ட சாரண ஆணையாளர் களுக்கான ஒரு நாள் விசேட செயலமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

பிரதம சாரண ஆணையா ளர் ஜனப்ரித் பெர்னாண்டோ வின் வழிகாட்டலின் கீழ் தலை மைக் காரியாலய பிரதி, உதவி ஆணையாளர்களால் பல்வேறு பட்ட தலைப்புகளில் நடத் தப்பட்ட இந்தச் செயலமர்வில் சகல மாவட்டங்களிலிருந்தும் ஊடகத்துக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆண், பெண் சாரண ஆணையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர். (எ)

# சாய்ந்தமருதில் உணவகங்களில் சுகாதாரம் பேணப்படவில்லையா?

உடன் அறிவிக்குமாறு மக்களிடம் கோரிக்கை

சாய்ந்தமருது, ஜன.20

சாய்ந்தமருது பிரதேச பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைபேசி மூலமான முறைப்பாட்டினைத் தொடர்ந்து அதன் உண்மைத் தன்மையை அறிய சாய்ந்தம ருதில் உள்ள உணவு கையாளும் சில நிறுவனங்கள் சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மத னின் வழிகாட்டலில் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே. எம். நிஸ்தாரால் பரிசீ லனை செய்யப்பட்டு சுகாதார சீர்கேடான உணவங்களுக்கு எச்சரிக்கையும், அறிவுறுத் தலும், கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பெப்ரவரி மாதம் தொடக்கம் அனுமதிப் பத்திரம், ஊழியர் மருத்துவ சான்றிதழ் இல்லாத மற்றும் முறையான கழிவு நீர் தொட்டி இல்லாத , குளிர்சாதனப் பெட் டிகள் முறையாக பராமரிக்காத, தனிநபர் சுகாதாரம் பேணாத, உணவு தயாரிக்கும் இடங்களை சுகாதாரமாக பேணாத உண வகங்கள், பேக்கரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படும் என்பதுடன் மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்புமாகும்.

ஆகவே, பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை உரிய ஆதா ரங்களுடன் 075, 333, 3453, 077, 670, 2703 , 070, 670, 2709 எனும் இலக்கங்க ளுக்கு அறியத் தருமாறு சாய்ந் தமருது சுகாதார வைத்திய அதிகாரி, பொதுமக் களை கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

## விழிப்புணர்வு செயலமர்வு

கல்முனை,ஜன.20

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியால யத்தில் "செழுமையான தேசம் அழகான வாழ்வு" என்ற தூர நோக்கை அடையும் விதத்தில் "கிளீன் சிறீலங்கா" செயல்திட் டத்தின் கீழ் பாடசாலை ஆள ணியினருக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதற்கான செயல மர்வு பாடசாலையின் ஆரா தனை மண்டபத்தில் நடை பெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ. ஜி. எம். ரிஷாட் தலைமையில் நடைபெற்ற இந்த் செயலமர் வில் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (எ)

# பால் காப்பு நிகழ்வு

கல்மு னை,ஜன.20

பெரிய நீலாவணை அன்பே சீரடி சாய் பாபா கோவில் மகா கும்பாபிஷே கத்துக்கான பால் காப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடை பெற்றது.

பெருந் திரளான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர். இதேவேளை, கல்முனை - பெரிய நீலாவ ணையில் சீரடி சாய் பாபா கோவில் கும்பாபிஷேக நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை



மாலை சீரடி சாய் பாபா சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய காரியாலய திறப்பு விழா




மட்டக்களப்பு, ஜன.20

ஒட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய காரி யாலய திறப்பு விழா அந்தச் சங் கத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம். எம். எஸ். ஹாரூன் ஸஹ் வியின் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸின் பிரதித் தலை வரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டனர். (எ)

# மலேரியா தடுப்பு பிரிவின் ஒன்றுகூடல்

சம்மாந்துறை, ஜன.20

கல்முனை பிராந்திய மலே ரியா தடை இயக்க பிரிவின் நலன்புரிச் சங்கத்தினால் ஏற் பாடு செய்யப்பட்ட பிரியாவி டையும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை சம்மாந்துறையில் உள்ள தனியார் நிறுவனமொன் றில் நடைபெற்றது.

மலேரியா தடுப்பு இயக்க பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எஸ். ஐ. எம். கபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம விருந்தின ராகவும், பிராந்திய சுகாதார மற்றும் மதிப்பீட் டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ. எம். மாஹிர் கௌரவ விருந் தின ராகவும் கலந்து கொண்டனர்.



நீண்ட காலமாக பிராந்திய மலேரியா தடை இயக்கப் பிரி வின் பொறுப்பு வைத்திய அதி காரியாக கடமை யாற்றி சம்மாந் துறை சுகாதார வைத்திய அதி காரியாக இட மாற்றம் பெற்றுச் சென்ற எம்.எம். நௌஷாத் இந்த நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக் கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பிராந் திய மலேரியா தடை இயக்க பிரி வில் மிக நீண்ட காலமாக தெளி கருவி இயக்கு நராக பணி யாற்றி அரச சேவை யிலிருந்து ஓய்வு பெற்றுச் செல் லும் எஸ். விமலேந்திரன் பாராட்டிக் கௌ ரவிக்கப்பட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் அறிவித்த பின் இஸ்ரேல் கொடூரத் தாக்குதல்!

## காஸாவில் 28 குழந்தைகள் உட்பட 115 பேர் பலி
## ஐ. நா. மனிதவுரிமைகள் சபை கடும் கண்டனம்

காஸா, ஜன.20

**போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு சில மணி நேரத்திலேயே, காஸா மீது இஸ்ரேல் கண்மூடித்தனமாக குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், 28 குழந்தைகள் உட்பட 115 பேர் பலியாகினர்.**

இஸ்ரேல் - காஸா இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நிலவி வந்தது. இந்த நிலையில், 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். மேலும், 250 பேரை பணயக் கைதிகளாக கடத்திச் சென்றனர். இதற்குப் பதிலடியாக காஸா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது.15 மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இந்தப் போரில் இதுவரை சுமார் 46 ஆயிரம் பலஸ்தீனியர்கள் பலியாகினர்.

வீடுகளை இழந்த இலட்சக்கணக்கானோர் பாதுகாப்பு தேடி எல்லை பகுதியில் தஞ்சமடைந்தனர். எனவே, போரை நிறுத்துவதற்காக கட்டார், எகிப்து உள்ளிட்ட நாடுகள் இரு தரப்பினரிடமும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இதன் பயனாக இருதரப்பினர் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த நிலையில், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான பலவீனமான போர் நிறுத்த ஒப்பந்தம் மீண்டும் வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்படி, காஸாவில் 28 குழந்தைகள் மற்றும் 31 பெண்கள் உட்பட 115 பேர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் இந்த தாக்குதல் சம்பவத்தில் 265 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று காஸாவின் சிவில் பாதுகாப்பு அமைப்பின் செய்தித் தொடர்பாளர் மஹ்மூத் பாசல் தெரிவித்தார்.

போர் நிறுத்த அறிவிப்பு இருந்தபோதிலும், காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்து குண்டு வீசி தாக்குதல் நடத்தியது. போர் நிறுத்த ஒப்பந்தத்தை சுற்றியுள்ள சில மணிநேரங்களுக்குள் காஸாவில் இவ்வளவு உயிரிழப்புகள் ஏற்பட்டன. மிகவும் இரத்தக்களரியான நாள்- என்று மஹ்மூத் பாசல் கூறினார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு கடும் கண்டனம் வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை, போர் நிறுத்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே, இஸ்ரேல் காஸாமீது கண்மூடித்தனமாக குண்டுவீச்சு தாக்குதல் நடத்தியுள்ளது. போர் நிறுத்தம் அமுலுக்கு வரும் வரை அமைதி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பலஸ்தீன பொதுமக்களை கொன்றது குறித்து எங்களுக்கு அதிர்ச்சியளிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது. (எ)

# மீண்டும் போரைத் தொடங்க இஸ்ரேலுக்கு உரிமையுள்ளது

## பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை

டெல் அவிவ், ஜன.20

தேவைப்பட்டால் அமெரிக்காவின் உதவியுடன் போரை மீண்டும் தொடங்குவதற்கான உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது என்று அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



காஸாவில் போர் நிறுத்தம் அமுலுக்கு வர சில மணி நேரங்களே இருந்த நிலையில், நெதன்யாகு தனது எக்ஸ் தளத்தில் பரபரப்பு பதிவு ஒன்றை போட்டுள்ளார். அதில், "ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டபடி விடுவிக்கப்படவுள்ள பணயக் கைதிகளின் பட்டியலை வெளியிடாதவரை இதை (ஒப்பந்தம்) நாம் முன்னெடுத்து செல்ல முடியாது. ஒப்பந்தத்தில் விதி மீறல் இருந்தால் அதை இஸ்ரேல் சகித்துக்கொள்ளாது. ஹமாஸ் மட்டுமே இதற்கு முழு பொறுப்பு" என்று குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து தொலைக்காட்சியில் உரையாற்றிய நெதன்யாகு, "தேவைப்பட்டால் அமெரிக்கா உதவியுடன் போரை மீண்டும் தொடங்குவதற்கான உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது. பணயக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவதை நான் உறுதி செய்வேன்"- என்றார். (எ)

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## 6 பேர் உயிரிழப்பு

கீவ், ஜன.20

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 6 பேர் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தீவிரமாகியுள்ளது. உக்ரைனுக்குள் நுழைந்து ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலடியாக ரஷ்யா மீது உக்ரைனும் ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகிறது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உள்ளன. அவற்றின் உதவியால் உக்ரைன் இன்னும் போரில் தாக்குப்பிடித்து நிற்கிறது. இந்தப் போரில் இரு நாடுகளும் சமீப காலமாக மாறிமாறி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அந்தவகையில் உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா சரமாரி ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் அங்குள்ள பல அடுக்குமாடி கட்டடங்கள் சேதமடைந்தன.

இந்தத் தாக்கு தலில் சிக்கி 3 பேர் பலியாகினர். இதேவேளை, நாட்டின் தெற்கில் நடந்த இரண்டு தாக்குதல்களில் மேலும் மூன்று பேர் கொல்லப்பட்டனர் என்று உக்ரைன் அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர். (எ)

# அமெரிக்காவில் 2, 500 பேருக்கு பொதுமன்னிப்பு

வாஷிங்டன், ஜன.20

அமெரிக்காவில் 2,500 பேருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, அமெரிக்க வரலாற்றில் அதிக பொதுமன்னிப்பு வழங்கிய ஜனாதிபதி என்ற பெருமையை ஜோ பைடன் பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இன்று பதவியேற்கிறார். இதேவேளை, ஜோ பைடனின் பதவிக்காலமும் நிறைவு பெறு கிறது.

இந்த நிலையில் தான் பதவி விலகும் முன்னர் அவர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கினார். இதன்படி, வன்முறையற்ற போதைப் பொருள் குற்றவாளிகள் 2 ஆயி ரத்து 500 பேருக்கு அவர் பொதுமன்னிப்பு மற்றும் தண் டனை குறைப்புகளை வழங்கி உத்தரவிட்டார். (எ)

## காஸாவில் போர் நிறுத்தம்
# 1,890 பலஸ்தீனியர்களை விடுவிக்கிறது இஸ்ரேல்

கெய்ரோ, ஜன.20

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, முதல் கட்டமாக 1,890 பலஸ்தீனிய சிறைக் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

காஸாவில் தொடரும் போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியாக எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான பணியில் ஈடுபட்டு வருகின்றன. இதன்படி, காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதனால், பணயக் கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டு உள்ள இஸ்ரேலியர்கள் 94 பேரை பாதுகாப்பாக விடுவிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இவர்களில் 3 இல் ஒரு பகுதியினர் உயிரிழந்திருக்கக் கூடும் என கூறப்படுகிறது.

இதேவேளை, ஒப்பந்தத்தின்படி முதல் கட்டத்தில் 1,890 பலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுவிக்கவுள்ளது என எகிப்து தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எகிப்து வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்தி குறிப்பில்,முதல் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் 42 நாட்கள் நீடிக்கும். இதன்படி, 1,890 பலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

அத்தோடு காஸாவிலிருந்து ஹமாஸ் அமைப்பு பிடித்து வைத்துள்ள இஸ்ரேல் பணயக் கைதிகளில் 33 பேர் விடுவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஆபிரகாம் லிங்கனின் பைபிள்மீது உறுதிமொழி

# அமெரிக்காவின் ஜனாதிபதியாக இன்று பதவியேற்கிறார் ட்ரம்ப்

வாஷிங்டன், ஜன.20

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இன்று பதவியேற்கிறார்.

ஆபிரகாம் லிங்கனின் பைபிள் மீது உறுதிமொழி செய்து ட்ரம்ப் பதவியேற்கிறார்.



கடந்த நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதையடுத்து, அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக அவர் இன்று பதவியேற்கிறார்.

இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த விழாவில் பங்கேற்க பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பதவியேற்பு விழாவின்போது ட்ரம்ப் பயன்படுத்தவுள்ள பைபிள் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி, தனது தாய் கொடுத்த பைபிள் மற்றும் மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் பயன்படுத்திய பைபிள் ஆகியவற்றின் மீது உறுதிமொழி எடுக்க உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற போதும், லிங்கனின் பைபிளை கொண்டு ட்ரம்ப் பதவியேற்றிருந்தார். (எ)

# 20-25 நிமிடங்களில் உயிர் தப்பினோம்!

## ஷேக் ஹசீனா தெரிவிப்பு

டாக்கா, ஜன.20

பங்களாதேஷில் பல்வேறு முறை படுகொலைக்கான சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன என்று முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா நினைவுகூர்ந்துள்ளார்.

ஷேக் ஹசீனா பேசிய உரை ஒன்று, பங்களாதேஷ் அவாமி லீக் கட்சியின் பேஸ்புக் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அதில், அவருடைய இளைய சகோதரி ஷேக் ரெஹானா மற்றும் ஹசீனா இருவரும் 20 முதல் 25 நிமிடங்களில் மரணம் நேரிடுவதில் இருந்து தப்பிய விவரங்களை கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் பலமுறை அவரை கொல்ல சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன என்றும் அவர் நினைவுகூர்ந்துள்ளார்.அந்த பதிவில், 2024 ஓகஸ்ட் 21ஆம் திகதி படுகொலையில் இருந்து தப்பினேன் என்றே நான் உணர்கிறேன். கொதலி பாராவில் நடந்த பெரிய வெடி குண்டு தாக்குதலில் இருந்து தப்பினேன். 2024ஆம் ஆண்டு ஓகஸ்டு 5ஆம் திகதியும் படு கொலையில் இருந்து உயிர் தப்பியுள்ளேன். அல்லாவின் கருணையும், கரமும் நிச்சயம் உள்ளது என தெரிவித்துள்ளார். அப்படி இல்லையெனில், இந்த முறை நான் உயிர் பிழைத்தி ருக்க முடியாது.

அவர்கள் என்னை கொல்ல எப்படி திட்டமிட்டனர் என்பது உங்களுக்கே பின்னர் தெரிந்திருக்கும். ஆனால், நான் ஏதேனும் செய்ய வேண்டும் என அல்லா விரும்புகிறார். அதனாலேயே நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன். எனினும், நான் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

எனக்கு, என்னுடைய நாடு இல்லாமல், வீடு இல்லாமல், அனைத்தும் எரிந்து போய் விட்டது என உணர்ச்சிவசப்பட்டு வேதனையை வெளிப்படுத்தும் குரலில் பேசி யுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 ஒட்டங்களுக்கு சுருண்டது மலேசியா

# உலக கிண்ண போட்டியில் இலங்கை அமோக வெற்றி

கோலாலம்பூர், ஜன.20

மலேசியாவுடனான போட்டியில் இலங்கை அணி அமோக வெற்றி பெற்றது. ஜூனியர் மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர் மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், கோலாலம்பூர் - பேயுமாஸ் ஓவல் மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மலேசியாவுக்கு எதிரான போட்டியில் 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அமோக வெற்றியீட்டியது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய சகல துறைகளிலும் திறமையை வெளிப்படுத்திய இலங்கை, இந்த வெற்றி மூலம் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு செல்வதற்கான தனது வாய்ப்பை கிட்டத்தட்ட உறுதி செய்து கொண்டது.

இரண்டாவது ஐ. சி. சி .19 வயதுக்குட்பட்ட மகளிர் ரி - 20 உலகக் கிண்ண அத்தியாயத்தின் இரண்டாம் நாள் போட்டிகள் நேற்று நடைபெற்றன. இதில்,தஹாமி சனெத்மாவின் பொறுமையான துடுப்பாட்டம், சஞ்சனா காவிந்தியின் அதிரடி துடுப்பாட்டம், சமுதி ப்ரபோதா, ரஷமி செவ்வந்தி, லிமன்சா திலக்கரட்ன ஆகியோரின் கட்டுப்பாடான பந்துவீச்சுகள் என்பன இலங்கையை இலகுவாக வெற்றிபெறச்செய்தன.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 162 ஓட்டங்களைக் குவித்தது.

19 வயதுக்குட்பட்ட மகளிர் ரி - 20 உலகக் கிண்ண வரலாற்றில் இலங்கை பெற்ற அதிகூடிய மொத்த எண்ணிக்கை இதுவாகும்.

தென்னாபிரிக்காவில் 2023இல் நடைபெற்ற அங்குரார்ப்பண 19 வயதுக்குட்பட்ட ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் அத்தியாயத்தில் பங்களாதேஷுக்கு எதிராக 4 விக்கெட்களை இழந்து பெற்ற 155 ஓட்டங்களே இலங்கை இதற்கு முன்னர் பெற்ற அதிகூடிய மொத்த எண்ணிக்கையாகும்.

மலேசியாவுடனான போட்டியில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சஞ்சான காவிந்தி 13 பந்துகளில் 6 பௌண்ட்ரிகளுடன் 30 ஓட்டங்களைக் குவித்தார். அத்துடன் சுமுது நிசன்சலாவுடன் 19 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தார்.

இதன் பின்னர் மிகவும் நிதானத்துடன் துடுப்பெடுத்



தாடிய தஹாமி சனெத்மா, இரண்டு சிறப்பான இணைப்பாட்டங்களில் பங்கெடுத்ததுடன் அரைச் சதம் குவித்து அசத்தினார்.

14 ஓட்டங்களைப் பெற்ற அணித் தலைவி மனுதி நாணயக்காரவுடன் 3ஆவது விக்கெட்டில் 40 ஓட்டங்களையும் 28 ஓட்டங்களைப் பெற்ற ஹிருணி குமாரியுடன் 4ஆவது விக்கெட்டில் 49 ஓட்டங்களையும் தஹாமி சனெத்மா பகிர்ந்து அணியை மேலும் பலப்படுத்தினார்.

52 பந்துகளை எதிர்கொண்ட தஹாமி சனெத்மா 5 பௌண்ட்ரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்று கடைசி ஓவரில் ஒரு பந்து மீதம் இருந்தபோது ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில், இலங்கையால் நிர்ணயிக்கப்பட்ட மிகவும் கடினமான 163 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மலேசிய மகளிர் அணி 14. 1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 23 ஓட்டங்களை மாத்திரம் பெற்று படுதோல்வியடைந்தது.

மலேசிய அணியில் ஆறு வீராங்கனைகள் ஓட்டம் ஏதும் பெறாமல் ஆட்டமிழந்தனர். நூர் ஆலியா 7 ஓட்டங்களையும் சுவாபிக்கா 6 ஓட் டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் சமுதி ப்ரபோதா 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் லிமன்சா திலக ரட்ன 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மனுதி நாணயக்கார 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (எ)

## 9 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அசத்தல் வெற்றி

44 ஒட்டங்களுக்கு சுருண்ட மே. இ. தீவுகள்

கோலாலம்பூர், ஜன.20

இந்தியாவுக்கு எதிரான போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் மகளிர் அணி வெறும் 44 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்த நிலையில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியா அசத்தல் வெற்றி பெற்றது.

2ஆவது ஜூனியர் மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர் (19 வயதுக்குட்பட்டோர்) மலேசியாவில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் நடப்பு சம்பியனான இந்திய அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணியுடன் நேற்று விளையாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணியின் வீராங்கனைகள் இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் ஆட்டமிழந்து வெளியேறினர். வெறும் 13. 2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த அந்த அணி 44 ஓட்டங்களுக்கு சுருண்டது. அந்த அணியில் 2 பேர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை தொட்டனர். அதிகபட்சமாக கெனிகா கசார் 15 ஓட்டங்கள் அடித்தார்.

சிறப்பாக பந்துவீசிய பருனிகா சிசோடியா 3 விக்கெட்களும், ஜோஷிதா மற்றும் ஆயுஷி சுக்லா தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர். இந்த நிலையில், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி ஒரு விக்கெட் மட்டும் இழந்து 4. 02 ஓவர்களில் 47 ஓட்டங்கள் எடுத்து அசத்தல் வெற்றி பெற்றது. (எ)

## முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி

முல்தான், ஜன. 20

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் முல்தானில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் முறையே பாகிஸ்தான் 230 ஓட்டங்களும், மேற்கு இந்திய தீவுகள் அணி 137 ஓட்டங்களும் அடித்தன.

இந்த நிலையில் 2ஆவது இன்னிங்ஸில் 157 ஓட்டங்களுக்கு பாகிஸ்தான் சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால், மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு 251 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இருப்பினும் அந்த அணியால் 123 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. (எ)

## நாலாவது சுற்றில் அலெக்ஸ் டி மினார்



மெல்பேர்ன், ஜன.20


அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் அலெக்ஸ் டி மினார் 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரரான அலெக்ஸ் டி மினார் ஆர்ஜென்ரீனாவின் பிரான்சிஸ்கோ செருண்டோலோவுடன் மோதினார்.

இதில் முதல் செட்டை பிரான்சிஸ்கோ கைப்பற்றி டி மினாருக்கு அதிர்ச்சி கொடுத்தார். பின்னர் அதிரடியாக விளையாடிய டி மினார் அடுத்த 3 செட்களை கைப்பற்றி வெற்றி பெற்றார்.

இந்த ஆட்டத்தில் 7-5, 7-6, 6-3 மற் றும் 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்ற டி மினார் 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். (எ)

## காலிறுதியில் சபலெங்கா



மெல்பேர்ன், ஜன.20

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் சபலெங்கா காலிறுதிக்கு முன்னேறினார்.

"கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் பெலாரஸ் வீராங்கனை அரினா சபலெங்கா - ரஷ்ய வீராங்கனை மிர்ரா ஆண்ட்ரீவா ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய சபலெங்கா 6-1,6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)

## செய்தியாளர் சந்திப்பில் கோபமடைந்த ரோஹித்

மும்பை, ஜன.20

இந்திய வீரர்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை பி. சி. சி. ஐ. விதித்துள்ளமை தொடர்பில் எழுப்பிய கேள்வியால் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா கோபமடைந்தார்.



தொடர் தோல்விகளின் எதிரொலியாக இந்திய கிரிக் கெட் வீரர்களுக்கு பி. சி. சி. ஐ. 10 அதிரடி கட்டுப்பாடுகளை விதித்ததாக செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் குறித்த விதிமுறைகள் தொடர்பில் ரோகித் சர்மாவிடம் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் ஒருவர் கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்வியால் கோபமடைந்த ரோஹித் சர்மா, "இந்த விதிகளைப் பற்றி உங்களுக்கு யார் கூறியது? அது அதிகாரபூர்வமான பக்கங்களிலிருந்து வெளியானதா? அது முதலில் வரட்டும், நாம் பேசுவோம்"- என்று காட்டமாக பதிலளித்தார்.(எ)

## ஆஸி ஓபன் ரென்னிஸில் அல்காரஸ் முன்னேற்றம்

மெல்பேர்ன், ஜன.20

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் கார்லஸ் அல்காரஸ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.



நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ் - பிரிட்டனின் ஜாக் டிராப்பருடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் இரு செட்களை 7-5, 6-1 என்ற புள்ளிக்கணக்கில் கார்லஸ் அல்காரஸ் கைப்பற்றினார்.

தொடர்ந்து 3ஆவது செட் தொடங்கும் முன்னர் ஜாக் டிராப்பர் காயம் காரணமாக போட்டி யிலிருந்து வெளியேறினார். இதன் காரணமாக கார்லஸ் அல்காரஸ் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## உள்ளூராட்சி...

இதுகுறித்த சட்ட மூலம் கடந்த 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

23ஆம் திகதி வரை இதற்கான ஆட் சேபனைக் காலமும் காணப்படுகி றது.

எனவே ஏப்ரல் முதல் வாரத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம் பெறும் என்று நம்புகின்றோம்-என்றார்.

## விக்டர்...

ஊடகங்களில் ஒரு முக்கிய நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தினார். பத்தி ரிகை மற்றும் ஊடக சுதந்திரத்திற் கான அவரது அர்ப்பணிப்பு அவருக்கு பரவ லான மரியாதையைப் பெற்றுத்தந்தது.

1949 ஜூன் 26ஆம் திகதி பிறந்த இவர், கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவராவார்.

இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் குறித்த விவரங்கள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சீனாவை...

ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு, பிராந்திய வல்லரசுகளாக இந்தியா மற்றும் சீனாவுக்கு விஜயம் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் அனைத்து நாடுகளுடனும் பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்த விஜயங்கள் மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார். (அ)

## வாடகை...

தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தின் நிலத்தின் மதிப்பைத் தவிர்த்து மாதாந்த வாடகை ரூ. 4.6 மில்லியன். முன்னாள் ஜனாதிபதி கள் குடியிருப்பை காலி செய்யவோ அல்லது வாடகையை தாங்களே செலுத் தவோ முடியும்.

“தற்போதுள்ள சட்டங்களின்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு குடியி ருப்பு அல்லது அவர்களது சம்பளத்தில் 1/3 பங்கு உரிமை உண்டு. அரசாங்கம் இப்போது இந்த நன்மையை ரூ. 30,000 ரொக்க கொடுப்பனவாக மட்டுப்படுத் தும். இது அவர்களின் சம்பளத்தில் 1/3 ஆகும்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகை, கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை தவிர்ந்த அனைத்து அமைச்சு பங்களாக் களும் ஹோட்டல் திட்டங்களுக்காக அல்லது வேறு பொருத்தமான பயன் பாட்டுக்காக மீளப் பயன்படுத்தப்படும்- என்றார். (அ)

## முன்னாள்...

சம்பவத்தின் தொடர்ச்சியாக நடந்து வரும் கொலைகளின் வரிசை யில் இந்த சம்பவமும் நடந்ததாகச் சந்தேகிக்கப்படு கிறது.

இரட்டைக் கொலை வழக்கு விசார ணைக்காக வந்தவர்களே துப்பாக்கி தாரிகளால் சுடப்பட்டனர்.

வெளிநாட்டில் உள்ள ஒருவரே கூலிப்படையினர் மூலம் இந்த துப் பாக்கிச்சூட்டை நடத்தியதாக பொலிஸ ார் சந்தேகிக்கின்றனர். அந்த நபரை சர்வ தேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் கூலிப்படையாகச் செயற்பட்டு துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகத்தில் இருவரை கடந்த வெள்ளிக் கிழமை பொலிஸார் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மன்னார், நடுக்குடாவில் வைத்து ஒருவ ரும், கொழும்பில் வைத்து ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் முன்னாள் இரா ணுவச்சிப்பாய்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்றத்தை வரவேற்கின்றார் மோடி!

புதுடில்லி, ஜன. 20

யாழ். கலாசார மத்திய நிலையத்தின் பெயர் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என பெயர் மாற்றம் செய்யப் பட்டமையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை வந்தபோது அப்போது யாழ்ப்பாணத்தில் 11 மில்லி யன் டொலர் மதிப்பில் கலாசார மையம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

இந்தக் கலாசார மையத்தை 2023 பெப்ரவரி மாதம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தனர்.

இந்தியா, இலங்கை நல்லுறவை வலுப்படுத்தும் விதமாக இந்திய நிதியுத வியுடன் கட்டப்பட்ட யாழ்ப்பாண கலாசார மையத்துக்கு தற்போது திருவள் ளுவர் கலாசார மையம் என பெயரி டப்பட்டுள்ளது. இந்நிலையில், திருவள் ளுவர் கலாசார மையத்துக்கு பிரதமர் மோடி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் மோடி எக்ஸ் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில்,

யாழ்ப்பாணத்தில் இந்திய நிதியுதவி யுடன் கட்டப்பட்ட கலாசார மையத் துக்கு திருவள்ளுவர் பெயர் சூட்டியதை வரவேற்கிறோம். இது திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்துவதுடன், இந்தியா மற்றும் இலங்கை மக்களுக்கு இடையே உள்ள ஆழமான கலாசார, மொழியியல், வரலாறு மற்றும் நாகரீக பிணைப்பு களுக்கு சான்று என பதிவிட்டுள்ளார்.

குறித்த பெயர் மாற்ற வைபவம் சம்பிரதாயபூர்வமாக நேற்று முன் தினம் யாழ். கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதன் பொழுது புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கினிதும சுனில் செனவி, கடற்றொழில் நீரியல் வளதுறை அமைச்சர் சந்திர சேகர், இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா இணைந்து பெயரை டிஜிற்றல் திரை மூலம் மாற்றம் செய்தனர். (அ)

## துறைமுகத்தில் நெருக்கடி

கொழும்பு, ஜன. 20

இலங்கை துறைமுக சேவைகள் சங்கத் தின் அறிவிப்பின்படி, துறைமுகத் தில் பாரவூர்திகளின் எண்ணிக்கை குறைவ தால் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட் டுள்ளது.

கொள்கலன் அனுமதியில் ஏற்படும் காலதாமதத்தை குறைக்க, சுங்க சோத னைகளுக்கு புதிய முற்றம் தேவை என சங்கத்தின் தலைவர் ரஞ்சித் லியனாராச்சி தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட கொள் கலன்கள் அனுமதிக்கப்படுவதில் ஏற் பட்ட தாமதம் காரணமாக, கொழும்பு துறைமுகத்தில் நீண்ட வரிசைகளில் கொள்கலன்கள் காத்திருக்கின்றன.

24 மணி நேர சேவை வழங்கும் சுங்கத் துறை சரியான முறையில் செயல்பட வில்லை என, நீண்ட நாட்களாக காத்தி ருந்து நெருக்கடியில் இருப்பவர்களான பாரவூர்தி சாரதிகள் குற்றம் சாட்டுகின் றனர். (அ)

## இலங்கைக்கு...

அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட வர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சில பிரதான அரசியல் கட்சிகளின் முக்கிய பிரமுகர்க ளையும் சந்திக்கவுள்ள அவர், சிவில் அமைப்புக்களின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, வடமாகாண ஆளுநர் வேதநாயகன், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். வர்த்தகர் சங்கத்தினர் மற்றும் சிவில் தரப்பினர் உள்ளிட்டவர்களை சந்திக்கவுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜாவுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ள அவர், யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள தரைக்கீழ் நீர் மற்றும் காலநிலை மாற்றம் சம்பந்த மான நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## விசாரணையின்...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

49 வயது குடும்பஸ்தரான சந்திர குமார் சந்திரபாலன் என்பவரே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் இரவு உயிரிழந்த நிலை யில் வல்வெட்டித்துறை ஊறணி வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக சடலம் அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. உடற்கூறு பரிசோதனை யில் மேலதிக தகவல்கள் பெறவேண்டியி ருந்ததால் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

குறித்த சடலத்தின் உடலில் அடி காயங் கள் காணப்படுவதாகவும் இது பொலிஸாரின் தாக்குதலால் ஏற்பட்டி ருக்கலாம் என்றும், இதனாலேயே குறித்த நபர் உயிரிழந்திருக்கலாம் எனவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## முத்திரையிடாத...

பெரும்போக நெல் அறுவடை இடம் பெற்று வருகின்ற நிலையில் விவசாயிக ள் அறுவடை செய்யும் நெல்லை விற் பனை செய்வதில் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

சில தனியார்கள் நெற் கொள்வனவு களில் மோசயில் ஈடுபட்டு வருவதாக விவசாயிகள் ஏற்கனவே குற்றச்சாட்டு களை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று கிளிநொச்சி குமரபுரம் பகுதியில் தனியார் வர்த்த கர்களால் நெல் கொள்ளளவு செய்த சமயம் முத்திரையிடப்படாத தராசினை பயன்படுத்தி நெல்லின் எடைகளை குறைத்து கொள்வனவு செய்ததை அவதானித்த விவசாயி குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தினார்.

பொதுமக்கள் குறித்த தனியார் வர்த்தகரை தடுத்து நிறுத்திச் சம்பவ இடத்துக்கு பொலிஸாரை வரவழைத்த னர். விவசாயிகளிடம் இருந்து கொள்வ னவு செய்யப்பட்ட நெல் முற்று முழு தாக மீட்கப்பட்டதுடன் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு சரியான எடை களின் படி பணம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு நெல் கொள்ளளவு செய்யும் தரகர்கள் ஊடாகவும் நெல் கொள்வனவு செய்கின்ற தனியார் ஊடாகவும் பெரும ளவான மோசடிகள் விவசாயிகளிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

## நாடு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் அரசாங்கத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன் படுத்திய வாகனங்களை எதிர்வரும் மாதத்துக்கு பின்னர் ஏலத்துக்கு விடு வேன். அதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

அந்த நிதியை திறைச்சேரிக்கு அனுப்புமாறு உரிய அமைச்சுகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் மோசடியாளர்கள் தற்போது திணறுகிறார்கள்.

தமக்கு இணக்கமான ஊடகங்களில் புலம்புகிறார்கள். இவர்கள் இன்னும் 2 தசாப்தங்கள் அழவேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்யும் சட்டமூலத்தை வெகுவிரைவில் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரு வேன்.

பாராளுமன்றத்துக்கு உணவுப் பொதி யுடன் வருமாறு குறிப்பிடவில்லை. பாராளுமன்றத்தில் உணவு பெறுவதா யின் அதற்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும்.

ஒரு வேளை உணவுக்கு 2 ஆயிரம் ரூபாய் செலவாகுமாயின் உறுப்பினர்கள் 2 ஆயிரம் ரூபாவை செலுத்தவேண்டும்.

இன்னும் ஓரிரு நாட்களில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிற்றுண்டிச்சாலை திறந்திருக்கும வேளை கட்டணத்தைச் செலுத்தி உணவை பெற முடியும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ ருக்கும் வாகன இறக்குமதிக்கான அனு மதி வழங்கப்பட மாட்டாது.

இந்த மாற்றத்தையே மக்கள் எதிர் பார்த்தார்கள்.

பொருளாதார ரீதியில் பலமடைந்த நாட்டை நாங்கள் பொறுப்பேற்க வில்லை. வங்குரோத்து நிலையடைந்த நாட்டையே நாங்கள் பொறுப்பேற் றோம்.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் இன்று செல்வந்த நாட்டை எங்களிடம் ஒப்படைத்ததை போன்று பேசுகிறார்கள்.

இந்த நாட்டை மீண்டும் வங்கு ரோத்து நிலையடைவதற்கு இடமளிக் கப்போவதில்லை.

ஊழலுக்கு எதிராக நடவடிக்கை களை எடுத்துள்ளதால் மோசடியாளர் கள் இன்று திணறுகிறார்கள். போலி யான குற்றச்சாட்டுக்களை முன்வைக் கின்றார்கள்-என்றார். (அ)

## இரண்டு...

கைது நடவடிக்கையை முன்னெடுத்த னர்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளை தொடர்ந்து குறித்த செயலுக்கு உடந்தையாக இருந்த வான் சாரதி உள்ளிட்ட மூவர் கண்டியில் கைது செய்யப்பட்டனர்.

மேலும் இரண்டு சந்தேக நபர்கள் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் கஸ்தூ ரியார் வீதியில் உள்ள நகைக் கடை யொன்றுக்குச் சென்ற குழுவொன்று வருமான வரித்துறை என தெரிவித்து 30 இலட்சம் ரூபாய் பணத்தை பறித்துச் சென்ற சம்பவம் இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக செய் யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் குற்றவாளிகளை கைது செய்யும் நடவ டிக்கையை பொலிஸார் மேற்கொண் டிருந்தனர்.

இதனடிப்படையில் சுன்னாகம் பகுதி யில் நேற்று முன்தினம் கைதான பிரதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

இதேவேளை கண்டியில் நேற்று கைதான மூவரையும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தனர். அவர்களை தொடர்ந்து, மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரு வர் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள்.

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிதி நிறுவனமொன்றின் நுவரெலியா கிளையொன்றின் முகாமையாளர், உதவி முகாமையாளர் ஆகியோரும் இந்த கொள்ளையுடன் சம்பந்தப்பட்டுள்ள தால், அவர்களும் கைது செய்யப்பட்ட னர். நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்தியே கொள்ளை யில் ஈடுபட்டனர். வாகனமும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வடக்கில் மழை நீடிக்கும்

கொழும்பு, ஜன. 20

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை அடுத்த 24 மணி நேரத்துக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று எச்சரிக்கை விடுத்தது.

நாட்டின் பல பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் வரை கனமழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## முன்னாள் அமைச்சர் கைது!

கொழும்பு, ஜன. 20

முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா, சட்டவிரோதமான முறையில் ட்ரக் வாகனம் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இலஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில், சட்ட விதிகளுக்கு முரணாக பொருத்தப்பட்ட வாகனத்தை அவர் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று வலான ஊழல் தடுப்புப் பிரிவில் முன்னிலையாகியபோதே முன்னாள் அமைச்சர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

அதேநேரம், விஜித் விஜயமுனி சொய்ஸாவை சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## அறுகம்குடா தாக்குதல் திட்டம் சிறையிலேயே தீட்டப்பட்டுள்ளது

கொழும்பு, ஜன. 20

அறுகம்குடாவில் தாக்கல் நடத்த சிறைச்சாலையிலிருந்தே திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு நீதிமன்றில் அறிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பயங்கரவாத விசாரணை பிரிவு, இந்த விடயத்தை தெரிவிதுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிச் சிறையில் இருக்கும் முன்னாள் போராளி ஒருவரின் ஊடாக இந்தத் தாக்குதலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு கூறியுள்ளது.

அறுகம்குடா விவகாரத்துடன் தொடர்புடைய 7 பேர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

## மோசமான வானிலையால் 4 மாவட்டங்களில் பாதிப்பு

கொழும்பு, ஜன. 20

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய வானிலையால் நான்கு மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 15 ஆம் திகதி முதல் பெய்து வரும் கனமழை காரணமாக அநுராதபுரம், கிளிநொச்சி, கேகாலை மற்றும் காலி மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த மாவட்டங்களில் 319 குடும்பங்களைச் சேர்ந்த 603 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கேகாலை மற்றும் காலி மாவட்டங்களில் நிலவும் மோசமான வானிலை காரணமாக 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 71 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# போலி ஆவணம் மூலம் அரச காணியை 22 மில்லியனுக்கு விற்று பெரும் மோசடி!

### குற்றப் புலனாய்வுப் பிரிவால் அரச உத்தியோகத்தர் ஒருவர் கைது

வவுனியா, ஜன. 20

**அரச காணி ஒன்றை போலி ஆவணம் தயாரித்து 22 மில்லியன் ரூபாய்க்கு விற்னை செய்த குற்றச்சாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

வவுனியா, பம்பைமடு பகுதியில் உள்ள அரச காணி ஒன்று போலி ஆவணங்கள் மூலம் 22 மில்லியன் ரூபாய்க்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உத்தியோகத்தரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# பொய்யாக நற்பெயர் பெற அரசு முயற்சி!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 20

அண்மைய மின்சாரக் கட்டண குறைப்பிற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொய்யாகக் நற்பெயரைப் பெற முயல்வதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா குற்றஞ்சாட்டினார்.

ஊடகவியலாளர்களிடம் பேசிய பெரேரா, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுதந்திரமாக கட்டணங்களைக் குறைக்க முடிவு செய்ததே தவிர அதை அரசாங்கம் செய்யவில்லை. அத்தகைய கட்டணக் குறைப்பு சாத்தியமில்லை என எரிசக்தி அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒரு ஜே.வி.பி தலைவர் கூட பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு முன் மின்சார கட்டணத்தை குறைக்க வலியுறுத்தி பேசவில்லை- என்றார். (அ)

# ஐக்கிய அரபு இராச்சியம் செல்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 20

தனது அடுத்த உத்தியோகபூர்வ விஜயமாக ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செல்லவுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க நேற்று தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து தமக்கு உத்தியோகபூர்வ அழைப்பு ஏற்கனவே கிடைத்துள்ளதாக களுத்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கைக்கு நன்மை பயக்கும் அரசாங்க ஒப்பந்தத்திற்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அரசாங்கம் ஆராயும் என ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# இலங்கை - சீன ஒப்பந்தங்கள் குறித்து பாராளுமன்றில் தெளிவுபடுத்த முடிவு

கொழும்பு, ஜன. 20

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்து பாராளுமன்றத்தில் விளக்கமளிக்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தீர்மானித்துள்ளார். அத்துடன் வெளிவிவகார அமைச்சின் விசேட தெளிவுப்படுத்தலும் இவ்வாரம் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக சீன விஜயத்தின்போது இருநாடுகளுக்கு இடையிலான கடல்சார் பொருளாதார புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், ஆய்வுக் கப்பல்கள் விவகாரம் குறித்தும் அரசாங்கம் அறிவிக்க உள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயத்தின் போது இரு நாடுகளுக்கு இடையில் 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து தீர்மானிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தங்களில் சீன - இலங்கை அரச ஊடகங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் விசேடமான ஒன்றாகும்.

இதேவேளை, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி) பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்புகளை மேம்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## வில்பத்து பூங்காவுக்கு செல்வதற்குத் தடை!

கொழும்பு, ஜன. 20

அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் கலா ஓயா நிரம்பி வழிவதால், வில்பத்து தேசிய பூங்காவுக்கான எழுவன்குளம் நுழைவு வாயில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து கலா ஓயா ஊடாக பாயும் சுமார் 6,000 கன அடி நீர் வில்பத்து தேசிய பூங்காவுக்கு செல்லும் எழுவன்குளம் - கலா ஓயா காலணி பாலத்தின் ஊடாக பாய்ந்து அப்பகுதியை முழுமையாக வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளது.

இதன்படி, மறு அறிவித்தல் வரை சுற்றுலாப் பயணிகளுக்கு வில்பத்துவுக்குச் செல்வதற்கு வாய்ப்பில்லை என வில்பத்து தேசிய பூங்காவின் எழுவன்குளம் நுழைவு வாயிலுக்குப் பொறுப்பான வனவிலங்கு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், மாதுரு ஓயாவை அண்மித்த பகுதிகள், மல்வத்து ஓயாவை அண்மித்த பகுதிகள் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் யான் ஓயாவை அண்மித்த பகுதிகளுக்கு வெள்ளப்பெருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மகாவலி ஆற்றை சூழவுள்ள பல பகுதிகளுக்கும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (அ)

## சுங்கத்துறை சேவைகளை முறையாக வழங்கவில்லை!

### வாகன உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 20

துறைமுகத்தில் கொள்கலன்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டாலும் கடுமையான நெரிசல் காணப்படுவதாக வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொள்கலன் அனுமதி தாமதங்களைக் குறைக்க சுங்க ஆய்வுகளுக்கு ஒரு புதிய முறை தேவைப்படுவதாக அதன் தலைவர் ரஞ்சித் லியனாராச்சி தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்படும் தாமதங்கள் காரணமாக நீண்ட கொள்கலன் வரிசைகள் இன்னும் காணப்படுகின்றன.

நீண்ட வரிசையில் காத்திருக்கும் கொள்கலன் லொறியின் சாரதிகள், சுங்கத்துறை 24 மணி நேர சேவைகளை வழங்குவதாகக் கூறினாலும், அது முறையாகச் செயல்படவில்லை என்று குற்றம் சாட்டுகின்றனர்.

இதற்கிடையில், தற்போது கொள்கலன் லொறிகளின் சாரதிகள் பற்றாக்குறை இருப்பதாக கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org